

## இந்தியா, அமெரிக்கா, இந்தோனேசியா உட்பட 15 ஆயிரம் வெளிநாட்டு மாணவர்கள் பங்கேற்பு

# அமிர்தா பொறியியல் கல்லூரியில் 'அனோஹா தொழில்நுட்ப திருவிழா'

## இன்று துவங்கி மூன்று நாட்கள் நடக்கிறது

கோவை, பிப். 18–

கோவை அமிர்தா பொறியியல் கல்லூரியில், 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொறியியல் மாணவர்கள் பங்கேற்புடன், 'அனோஹா 2016 தொழில்நுட்ப திருவிழா' இன்று துவங்கியது.

கோவை அமிர்தா பொறியியல் கல்லூரியில், அனோஹா தொழில்நுட்ப திருவிழா, இன்று காலை கோலாகலமலாக துவங்கியது. இந்தியாவில் முதன் முறையாக, ஐக்கிய நாடுகளின் அங்கீகாரம் பெற்று நடைபெற உள்ளது.

விழா குறித்து, அமிர்தா பொறியியல் கல்லூரியின் நிர்வாகி சங்கன் ராமநாதன் கூறுகையில், இந்தியா மட்டுமல்லாது, உலக அளவிலான தொழில்நுட்ப மாணவர்களை ஒருங்கிணைத்து, அவர்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வகையில், அனோஹா தொழில்நுட்ப திருவிழா, நடைபெற உள்ளது.

பெங்களூர் டொயோட்டா எஞ்சின் இந்தியா நிறுவனத்தின் துணை நிர்வாக இயக்குனரும், இயக்குநர் குழு உறுப்பினருமான டி.பி.பரசுராமன், விழாவை துவக்கி வைக்க உள்ளார். இன்று (18ந் தேதி) துவங்கி, மூன்று நாட்கள் நடைபெறும் இந்நிகழ்ச்சியில், 24 பட்டறைகளும், 75 போட்டிகளும் நடைபெற உள்ளது. இதில், வெற்றி பெறும் மாணவர்களுக்கு, ரூ.15 லட்சத்துக்கான பணப்பரிசு வழங்கப்பட உள்ளது. விழாவில், இந்தியாவின் உயர்மட்ட பொறியியல் கல்லூரிகளான ஐஐடி, என்ஐடி, ஐஐஐடி, *BITS Pilani* உடன் அமெரிக்கா, இந்தோனேசியா, காமெரூன், மொராக்கோ மற்றும் எகிப்த் உள்ளிட்ட நாடுகளின் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 15,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்க உள்ளனர்.

விழாவில், பேச்சாளர்கள், ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆரம்ஸ்ட்ராங் பாம், சுற்றுச்சூழல் ஆர்வலர் அருண் கிருஷ்ணமூர்த்தி, நீச்சல் வீரர் பன்யான்,நேஷன் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மணி மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவன முன்னாள் வடிவமைப்பு ஆராய்ச்சியாளர் அலெக்சாண்டர் உட்பட பலர் பங்கேற்க உள்ளனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.